# முதலாமாண்டு மாணவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி நிகழ்வு

இராமேஸ்வரம், பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026 - 2027 ஆம் கல்வியாண்டில் இளநிலை முதலாமாண்டு சேர்ந்துள்ள மாணாக்கர்களுக்கான ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்டம் 01.07.2026 முதல் 08. 07.2026 வரை நடைபெற்றது.

**முதல் நாள் : 01.07.2026 - புதன்கிழமை**

முதல் நாள் தொடக்க விழா காலை 10:30 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. முதல் நிகழ்வாக தமிழ்த்துறை கௌரவிரிவுரையாளர் வே.பாஸ்கரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து அனைத்துத் துறைத் தலைவர்களும் மாணாக்கர்களை வாழ்த்திப் பேசினர். நிறைவாக கணிதத்துறை கௌரவ விரிவுரையாளர் திரு த.மகேந்திரகுமார் அவர்கள் நன்றியுரை கூறினார். பின்னர் உணவு இடைவேளைக்குப் பிறகு, வகுப்பாசிரியர்கள் அனைவரும் மாணாக்கர்களுக்கு கல்லூரி வளாகத்தைச் சுற்றிக் காட்டினர். இறுதி நிகழ்வாக ”பாடத்திட்டமும் பயிற்றுவிப்பு முறைகளும்” குறித்து துறை சார்ந்த பேராசிரியர்கள் பேசினர். இறுதியில் நாட்டுப்பண்ணுடன் முதல் நாள் நிகழ்வு முடிவுற்றது.



**இரண்டாம் நாள் : 02.07.2026 - வியாழக்கிழமை**

இரண்டாம் நாள் நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. முதல் நிகழ்வாக காலை 10.30 மணியிலிருந்து 11:30 மணி வரை ”தெளிவான இலக்கே நிறைவான வாழ்க்கை” என்னும் தலைப்பில் கணினி அறிவியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் பு.பிரியங்கா அவர்கள் மாணாக்கர்களிடையே உரையாற்றினார். அவர் பேசும் போது உள்ளம் தெளிவானால் எல்லாம் அழகாகும் என மாணாக்கர்களை உற்சாகப்படுத்திப் பேசினார்.





தொடர்ந்து 11:30 மணியிலிருந்து 12:30 மணி வரை ”பாலின சமத்துவமும் உள்ளகப் புகார் குழுவும்” என்னும் தலைப்பில் தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் ஜெ.ஜென்சிதா அவர்கள் பாலின சமத்துவமானது சமூகத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்று மாணாக்கர்களிடையே பேசினார்.



இறுதியாக 12:30 மணியிலிருந்து 01.30 மணி வரை கணினி அறிவியல் துறை கௌரவ விரிவுரையாளர் திரு.சு.ராஜ்குமார், அவர்கள் ”மனிதநேயமும் மனித உரிமைகளும்” என்னும் தலைப்பால் சக மனிதர்களிடம் அன்பு காட்டுவது உயர்ந்த பண்பு என மாணாக்கர்களிடையே பேசி அவர்களை உற்சாகமூட்டினார். இறுதியில் நாட்டுப்பண்ணுடன் அன்றைய நிகழ்வு நிறைவுற்றது.







**மூன்றாம் நாள் : 03.07.2026 - வெள்ளிக்கிழமை**

மூன்றாம் நாள் நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. நிகழ்வின் தொடக்கமாக காலை 10:30 மணியிலிருந்து 11.30 மணி வரை ”பண்பட்ட பள்ளிக் கல்வியிலிருந்து களிப்பூட்டும் கல்லூரிக் கல்வியை நோக்கி” என்னும் தலைப்பில் தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் மு.செல்வி அவர்கள், பள்ளிக் கல்விக்கும் கல்லூரி கல்விக்கும் உள்ள அணுகுமுறைகளை மாணாகர்களிடையே எடுத்துக்கூறி விளக்கினார்.



தொடர்ந்து 11:30 மணியிலிருந்து 12:30 மணி வரை இளநிலை மாணாக்கர்களுக்கான "வேலை வாய்ப்புகளும் வளர்த்துக்கொள்ள வேண்டிய தகுதிப்பாடுகளும்" என்னும் தலைப்பில் கணினி அறிவியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் அ.பபிதா அவர்கள், டிஜிட்டல் மீடியா, திரைப்படங்கள், யூடியூப் மற்றும் விளம்பரத் துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெற பல்வேறு விதமான யோசனைகளை மாணாக்கர்களுக்கு எடுத்துக்கூறி விளக்கினார்.




இறுதியாக 12.30 மணியிலிருந்து 01.30 மணி வரை "கவின் கலை மன்றங்களும் கலைத்திறன் பயிற்சிகளும்" என்னும் தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியர்கள் திருமதி நா.மகேஸ்வரி, திருமதி சி.வினிதா, செல்வி ந.லாவண்யா ஆகியோர் கவின் கலைகள் மூலம் மனிதனின் கற்பனைத் திறன், நுட்பம், உணர்ச்சிகள் போன்றவை கலையாக வெளிப்படுகின்றன என மாணாக்கர்களிடையே விளக்கி எடுத்துரைத்தனர். நிறைவாக நாட்டுப் பண்ணுடன் அன்றைய நாள் நிகழ்வு முடிவுற்றது.






**நான்காவது நாள் : 06.07.2026 - திங்கட்கிழமை**

நான்காம் நாள் நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. முதல் நிகழ்வாக காலை 10:30 மணி முதல் 11.30 மணி வரை ”மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணறுதல்” என்னும் தலைப்பில் வணிகவியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் சி.அழகுராஜா அவர்கள், ஒவ்வொருவரிடமும் இருக்கும் தனித்துவமான ஆற்றல் மற்றவர்களிடமிருந்து உன்னை வேறுபடுத்திக் காட்டும் என மாணாக்கர்களின் தனித்திறமைகள் குறித்துப் பேசினார்.




தொடர்ந்து 11:30 மணி முதல் 12.30 மணி வரை ”கல்வி வளர்ச்சியில் நூலகத்தின் பங்கு” என்னும் தலைப்பில் ஆங்கிலத் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் அ.சேவியர் அவர்கள், நூலகம் மொழி அறிவையும், கற்பனை திறனையும் மேம்படுத்தும் என்று எடுத்துரைத்து நூலகத்தின் பயன்பாட்டை விரிவாக விளக்கிப் பேசினார்.



இறுதியாக 12.30 மணியிலிருந்து 01.30 மணி வரை ”நூல் நயமும் அறிவு வளமும்” என்னும் தலைப்பில் ஆங்கிலத் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் மு.கலீல் ரகுமான் அவர்கள், இளமையில் கற்றால் முதுமையில் வளமுடனும் நலமுடனும் வாழலாம் என்று கூறி நூல்களின் சிறப்பினை மாணாக்கர்களிடையே எடுத்துரைத்தார். இறுதியாக நாட்டுப் பண்ணுடன் அன்றைய நாள் நிகழ்வு நிறைவுற்றது.




**ஐந்தாம் நாள் : 07.06.06 – செவ்வாய்க்கிழமை**

ஐந்தாம் நாள் நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. முதல் நிகழ்வாக காலை 10:30 மணி முதல் 11:30 மணி வரை வணிகவியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் சி.மூர்த்தி அவர்கள், ”போட்டித் தேர்வுகளும் தயாரிப்பு முறைகளும்” எனும் தலைப்பில் TNPSC, UPSC, SSC, RRB ஆகிய தேர்வுகள் குறித்து மாணாக்கர்களிடையே விளக்கினார்.



தொடர்ந்து 11:30 மணியிலிருந்து 12:30 மணி வரை ஆங்கிலத்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் அ.பர்ணபாஸ் அவர்கள், “நாட்டு நலப்பணித்திட்டமும் பிற அமைப்புகளும்” என்னும் தலைப்பில் நாட்டு நலப்பணித்திட்டம் என்பது மாணாக்கர்களின் ஆளுமையை மேம்படச் செய்யும் ஓர் அமைப்பாகும் என இத்திட்டத்தின் பயன்களை மாணாக்கர்களிடம் எடுத்துரைத்தார்.




அடுத்து 12.30 மணி முதல் 1.30 மணி வரை ”தியான பயிற்சியும் மனநலமும்” என்னும் தலைப்பில் Y.கோகிலவாணி அவர்கள் மாணாக்கர்களுக்கு தியானப் பயிற்சிகள் அளித்தும் அவற்றின் நன்மைகள் குறித்தும் பேசினர். இறுதியாக நாட்டுப்பண்ணுடன் அன்றைய நாள் நிகழ்வு முடிவுற்றது






**ஆறாம் நாள் : 08.07.2026 - புதன்கிழமை**

ஆறாம் நாள் நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. நிகழ்வின் தொடக்கமாக காலை 10:30 மணியிலிருந்து 11:30 மணி வரை வணிகவியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் ஐ.ஷமீம்பானு அவர்கள், ”அலைப்பேசி பயன்பாடும், நோக்கமும், கவனமும்” என்னும் தலைப்பில் அலைபேசியை தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தும் போது உடல் நலக்கோளாறுகள், மன அழுத்தம், கவனச்சிதறல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் என மாணாக்கர்களிடையே எடுத்துக் கூறினார்.




தொடர்ந்து 11:30 மணி முதல் 12.30 மணி வரை தமிழ்த்துறை கௌர விரிவுரையாளர் முனைவர் வி.வெள்ளைச்சாமி அவர்கள், ”போதையால் வரும் கேடு” என்னும் தலைப்பில் போதையால் நடைபிணமாகவும் சமூகத்தில் பல அவமானங்களையும் பெற்ற தாயும் மதிக்காத நிலைக்குத் தள்ளப்படுவோம் என போதையின் தீமைகள் குறித்து மாணாக்கர்களிடம் எடுத்துரைத்தார்.



அடுத்த நிகழ்வாக 12:30 மணியிலிருந்து 01.30 மணி வரை வணிகவியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் மா.வேல்முருகன் அவர்கள், ”பல்கலைக்கழக தேர்வுத் முறைகளும் மதிப்பீடுகளும்” என்னும் தலைப்பில் தேர்வு முறைகள், மதிப்பெண்கள் வழங்கப்பெறும் நிலை குறித்து மாணாக்கர்களிடையே விரிவாக விளக்கினார்.




அடுத்த நிகழ்வாக மாலை 2 மணியளவில் வழக்கறிஞர் கார்த்திக் (வட்ட சட்டப் பணிக்குழு, இராமேஸ்வரம்) அவர்களும், தன்னார்வலர் திருமதி கார்த்திகை செல்வி அவர்களும் வட்ட சட்டப் பணிக்குழு மூலம் பெற வேண்டிய சலுகைகள் குறித்து மாணாக்கர்களிடையே விரிவாக விளக்கிப் பேசினார்.






**நிறைவு விழா**

நிறைவு விழா மாலை 3 மணியளவில் தொடங்கியது. தொடக்கமாக ஆங்கிலத்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் அ.பர்ணபாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ரமேஷ்குமார் (மு.கூ.பொ) அவர்கள், தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது மாணாக்கர்களுக்கு எதையும் ஆழ்ந்து கற்கும் மனநிலை வேண்டும். அப்போதுதான் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்று கூறி, இக்கல்லூரியின் நடைமுறை வழிமுறைகளையும் எடுத்துக் கூறினார். நிறைவாக கணினி அறிவியல் துறை கௌரவ விரிவுரையாளர் சு.ராஜ்குமார் அவர்கள் நன்றியுரை கூறினார். இவ்விழாவில் கல்லூரி கண்காணிப்பாளர், நிதியாளர், கௌரவ விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த ஒரு வார புத்தாக்க அறிமுகப் பயிற்சி வகுப்பில் 70 மாணாக்கர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதியாக நாட்டுப் பண்ணுடன் இவ்விழா நிறைவடைந்தது.







